**அக்டோபர் – 22**

# TNPSC துளிகள்

- மத்திய அரசானது தமிழ்நாடு தலைமைச் செயலாளரான K. சண்முகம் அவர்களின் பணிக் காலத்தை அடுத்த 3 மாதங்களுக்கு, அதாவது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.
- மலையாளக் கவிஞர் மற்றும் 2019 ஆம் ஆண்டின் ஞானபீட விருதைப் பெற்றவரான அக்கிதம் அச்சுதன் நம்பூத்ரி அவர்கள் சமீபத்தில் காலமானார்.
    - இவருக்கு 2017 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சோயுஸ் எம்எஸ் – 17 விண்கலம்



- ரஷ்யாவின் சோயுஸ் எம்எஸ் – 17 விண்கலமானது 64வது விண்வெளிப் பயணத் திட்டத்தின் கீழ் விண்வெளி வீரர்களுடன் சர்வதேச விண்வெளி நிலையத்தை (ISS - International Space Station) நோக்கிச் சென்றுள்ளது.
- அந்த வீரர்கள் கத்திலீன் "கேட்" ரூபின்ஸ் மற்றும் விண்வெளி வீரர்களான செர்கே ரைசிகோவ் மற்றும் செர்கே குட்-ஸ்வெர்க்கோவ் ஆகியோர் ஆவர்.
- இந்த 3 விண்வெளி வீரர்களும் விண்வெளி நிலையத்தில் 6 மாதங்கள் தங்கி ஆய்வு செய்யவுள்ளனர்.
- இது விண்வெளி நிலையத்திற்கு ரூபின்ஸின் 2வது பயணம் ஆகும். 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ISSற்கு சோயுஸ் எம்எஸ் விண்கலம் மேற்கொண்ட தனது முதல் பயணச் சோதனையின் மூலம் இவர் தனது முதலாவது பயணத்தை மேற்கொண்டார்.

# சுற்றுச்சூழல் செய்திகள்


## விலங்குகளின் வலசைப் பாதை மீதான உரிமை

- இந்திய உச்ச நீதிமன்றமானது விலங்குகளின் வலசைப் பாதை மீதான உரிமையை உறுதி செய்து அந்தப் பகுதிகளில் இருக்கும் விடுதிகளை மூடுவதற்கு வழிவகை செய்யும் வகையில் நீலகிரி யானைகள் பெருவழிப் பாதை குறித்த 2011 ஆம் ஆண்டின் மதராஸ் உயர் நீதிமன்ற ஆணையை உறுதி செய்துள்ளது.
- 2011 ஆம் ஆண்டில், மதராஸ் உயர்நீதிமன்றமானது நீலகிரி மாவட்டத்தின் சிகுர் பீடபூமியில் "யானைகள் பெருவழிப் பாதை" ஒன்றை அறிவிக்கும் தமிழ்நாடு அரசின் அறிவிப்பாணையின் செல்லுபடித் தன்மையை உறுதி செய்தது.
- வனப் பகுதிகள் சுருங்கி வந்த போதிலும் யானைகள் பெருவழிப் பாதையானது அதன் தனித்துவ வன வாழ்விடங்களுக்கிடையேயான பயணத்திற்கான வசதியை மேற்கொள்ளச் செய்வதன் மூலம், வாழ்வாதாரத்திற்கு வேண்டி தமது இடம்பெயரும் முறையைத் தொடர யானைகளை அனுமதிக்கின்றது.
- இந்தப் பெருவழிப் பாதையானது வாழ்விடத் தனிமையின் மீதான தாக்கத்தைக் குறைப்பதன் மூலம் வனவிலங்குகளின் நீடித்த நிலைத் தன்மையில் ஒரு முக்கியப் பங்கினை ஆற்றுகின்றது.
- நீலகிரி யானைகள் பெருவழிப் பாதையானது மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளை இணைக்கும் பகுதியான சூழலியல் ரீதியில் மிகுந்த பலவீனமான பிரதேசமான சிகுர் பீடபூமியில் அமைந்துள்ளது.
- இது நீலகிரி மாவட்டத்தில் முதுமலை தேசியப் பூங்காவிற்கு அருகில் அமைந்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி மையம் - ஹைதராபாத்

- இன்டெல் இந்தியா நிறுவனமானது ஹைதராபாத்தில் ஒரு பயன்பாட்டுச் செயற்கை நுண்ணறிவு (AI - Artificial intelligence) ஆராய்ச்சி மையத்தைத் தொடங்க இருப்பதாக அறிவித்துள்ளது.
- இந்த ஆராய்ச்சி மையமானது பின்வருவனவற்றுடன் இணைந்து தொடங்கப்பட உள்ளது.
    - தெலுங்கானா மாநில அரசு
    - சர்வதேசத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம், ஹைதராபாத்
    - இந்தியாவின் பொதுச் சுகாதார அமைப்பு
- இந்த அமைப்பு திறன்மிகு கூடுகைத் துறைகள் மற்றும் சுகாதார நலம் ஆகியவற்றில் உள்ள சவால்களை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துகின்றது.




## "ரெப் லைட் ஆன் காடி ஆப்" – தில்லி

- "ரெட் லைட் ஆன் காடி ஆப்" என்பது ஒரு விழிப்புணர்வுப் பிரச்சாரமாகும்.
- இது அக்டோபர் 21 முதல் நவம்பர் 15 வரை அனுசரிக்கப்படும்
- இது ஒரு அமலாக்கப் பிரச்சாரம் அல்ல.
- இது ஒரு தனிநபர்கள் பின்பற்றக்கூடிய பிரச்சாரமாகும்.
- போக்குவரத்து சமிக்ஞை நிறுத்தங்களில் 10 இலட்சம் மக்கள் இயந்திரத்தின் எரியூட்டலை நிறுத்துவதன் மூலம் ஒரு ஆண்டில் PM10 என்ற நுண்மத் துகள்களின் (Particulate matter) அளவானது 1.5 டன்களாகவும் PM2.5 என்ற நுண்மத் துகள்களின் அளவானது 0.4 டன்களாகவும் குறையும் என்று இதன் மூலம் எதிர்பார்க்கப் படுகின்றது.

## உலகின் மிகப்பெரிய துத்தநாக உருக்கு உலைத் திட்டம்

- குஜராத் மாநில அரசானது, அம்மாநிலத்தில் ஒரு புதிய துத்தநாக உருக்கு உலையை அமைப்பதற்காக வேதாந்தா குழும நிறுவனம், இந்துஸ்தான் துத்தநாக நிறுவனம் ஆகியவற்றுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- குஜராத்தில் இந்துஸ்தான் துத்தநாக நிறுவனத்திற்காக முதன்முறையாக அமைக்கப்படும் இந்த வசதியானது சுழிய அளவிலான கழிவு வெளியேற்றத் தொழில்நுட்பத்துடன் இருக்கும். மேலும் இது உலகில் குறைந்த செலவு கொண்ட உருக்கு ஆலைகளில் ஒன்றாகவும் இருக்கும்.
- இந்துஸ்தான் துத்தநாக நிறுவனமானது துத்தநாகம் – ஈயம் மற்றும் வெள்ளி ஆகியவற்றுக்கான இந்தியாவின் ஒரே ஒருங்கிணைந்த உற்பத்தியாளர் ஆகும் மேலும் இது உலகின் மிகப்பெரிய உற்பத்தியாளர்களில் ஒன்றாகும்.

# முக்கிய தினங்கள்

## அறிவுசார் சொத்துரிமைக் கல்வி வாரம் – அக்டோபர் 15 முதல் 23

- அறிவுசார் சொத்துரிமைக் கல்வி வாரமானது அக்டோபர் 15 முதல் அக்டோபர் 23 வரை அனுசரிக்கப் படுகின்றது.
- இது அறிவுசார் சொத்துரிமைத் துறை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மத்தியக் கல்வி அமைச்சகத்தின் நிறுவனப் புத்தாக்க ஆணையமானது (IIC - Institution Innovation Council) அறிவுசார் சொத்துரிமைக் கல்வி வாரத்தை அனுசரிக்கின்றது.
- இந்த ஆணையமானது IIC 2.0 என்ற வருடாந்திர அறிக்கையையும் சமர்ப்பித்து இருக்கின்றது.
- மேலும் IIC 3.0 என்ற அறிக்கையின் வெளியீடும் நடத்தப் பட்டது.

# இதரச் செய்திகள்

## உலக காச நோய் (TB) அறிக்கை 2020

- சமீபத்தில் உலக சுகாதார நிறுவனமானது உலக காச நோய் அறிக்கை, 2020 என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கை கோவிட் – 19 தொற்றானது உலகில் காச நோய் தொடர்பான இறப்புகளை 8 ஆண்டுகளுக்குப் பின்னோக்கி இழுத்துச் சென்று விடும் என்று கூறுகின்றது.
- வேறு வார்த்தைகளில் கூறுவதனால், இது TB (Tuberculosis) இறப்புகளை 0.2 லிருந்து 0.4 மில்லியனாக அதிகரிக்கக் கூடும் என்று தெரிகின்றது.

### *சிறப்பம்சங்கள்*

- பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, தென் ஆப்பிரிக்கா ஆகியவை உலகில் 44% காச நோய் நிகழ்வுகளுக்குக் காரணமாக விளங்குகின்றன.
- மருந்து எதிர்ப்பு கொண்ட காச நோயினை அதிகம் கொண்டுள்ள மூன்று நாடுகள் இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா ஆகியனவாகும்.
- உலகில் மூன்றில் 2 பங்கு காச நோய் நிகழ்வுகளுக்குத் தாயகமாக இருக்கும் 8 நாடுகள் இந்தியா, இந்தோனேஷியா, சீனா, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், நைஜீரியா, வங்க தேசம் மற்றும் ரஷ்யா ஆகியனவாகும்.
- 2015 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலக் கட்டத்தில், 9% TB நிகழ்வுகள் குறைந்துள்ளன மற்றும் 14% TB இறப்புகள் குறைந்துள்ளன.
- இந்தியாவானது உலகில் அதிக TB நிகழ்வுகளைக் கொண்டுள்ளது.

- மொத்த உலக TB நிகழ்வுகளில் 26% நிகழ்வுகள் இந்தியாவில் ஏற்படுகின்றன.
- இந்தியாவானது 2020 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் வரையில் TB நிகழ்வுகளை அறிவிக்கச் செய்வதில் 85% என்ற அளவிற்கு ஒரு சரிவை ப் பதிவு செய்துள்ளது.
- TB இறப்புகள் 2,00,000 மற்றும் 4,00,000 ஆகியவற்றுக்கு இடைப்பட்ட அளவில் இருக்கும்.

## இந்திய அறிவுசார் சொத்து அறிக்கை 2018-19

- அறிவுசார் சொத்து குறித்த இந்திய வருடாந்திர அறிக்கையானது இந்திய அரசினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இதனுடன், 2018-19 ஆம் ஆண்டிற்கான வருடாந்திரத் தரவரிசையானது இந்திய அரசின் தலைமைக் காப்புரிமை, வடிவமைப்பு மற்றும் முத்திரை அலுவலகத்தினால் இறுதி செய்யப் பட்டுள்ளது.
- இதில் இந்தியாவில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிடையே, சண்டிகர் காருன் பல்கலைக்கழகம் (Chandigarh University Gharuan) முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இது ஒரு ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான காப்புரிமைகளை (336 காப்புரிமைகள்) தாக்கல் செய்ததற்காக முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இதற்கு அடுத்து 239 காப்புரிமைத் தாக்கல்களுடன் டாடா ஆலோசக சேவைகள் நிறுவனம் இடம் பிடித்துள்ளது.
- சிஎஸ்ஐஆர் (CSIR) 202 காப்புரிமைத் தாக்கல்களுடன் 3வது இடத்திலும் பிஎச்இஎல் (BHEL) ஆனது 173 காப்புரிமைத் தாக்கல்களுடன் 4வது இடத்திலும் உள்ளன.
- ஒட்டுமொத்த காப்புரிமைத் தாக்கல் பிரிவில், 27 இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் 557 காப்புரிமைகளைத் தாக்கல் செய்துள்ளன.

*மாநிலத்தின் செயல்பாடுகள்*

- பஞ்சாப் மாநிலமானது முதன்முறையாக ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத் துறையில் இந்தியாவின் முதல் 10 மாநிலங்களில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் 507 காப்புரிமைத் தாக்கல்களுடன் ஹரியானா இரண்டாம் இடத்திலும் 193 காப்புரிமைத் தாக்கல்களுடன் இமாச்சலப் பிரதேசம் 3வது இடத்திலும் உள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★